


புதுடெல்லியில் நாடாளுமன்ற கூட்டத் தொடரையொட்டி நடைபெற்ற அனைத்துக் கட்சிக்கூட்டத்தில் மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோர் கலந்து கொண்டனர்.



‘சமூகநீதிக்கான உலகின் முதல் ஓ.டி.டி’ தளமாக லிபர்ட்டி கிரியேஷன்ஸ் சார்பில் ‘பெரியார் விஷன்’ ஓ.டி.டி. தளம் தொடக்க விழா நேற்று முன்தினம் (21.7.2024) காலை சென்னை பெரியார் திடலில் எம்.ஆர். இராதா மன்றத்தில் நடைபெற்றது. ‘பெரியார் விஷன்’ ஓ.டி.டி. தளம் நேர்காணல் பதிவு அலுவலகத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் திறந்துவைத்தார். தி.மு.க. துணைப்பொதுச்செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நடிகர் சத்யராஜ், பெரியார் திரைப்பட இயக்குநர் ஞான.ராஜசேகரன் அய்.ஏ.எஸ்., மற்றும் ஓவியர் டிராட்ஸ்கி மருது திறப்பு விழாவில் கலந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றத்தில் நடைபெற்ற ‘பெரியார் விஷன்’ ஓ.டி.டி. தளம் தொடக்க விழாவில் லிபர்ட்டி கிரியேஷன்ஸ் இயக்குநர் வீ.அன்புராஜ் அனைவரையும் வரவேற்றார்.

### ‘சமூக நீதிக்கான உலகின் முதல் ஓ.டி.டி.’ தளமாக – லிபர்ட்டி கிரியேஷன்ஸ் சார்பில்

# ‘பெரியார் விஷன்’ ஓ.டி.டி. தளம்! கி.வீரமணி திறந்து வைத்தார்!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. - நடிகர் சத்தியராஜ் - ஞான.ராஜசேகரன் - ஓவியர் டிராட்ஸ்கி மருது பங்கேற்பு!

சென்னை, ஜுலை 23-

‘சமூக நீதிக்கான உலகின் முதல் ஓ.டி.டி.’ தளமாக லிபர்ட்டி கிரியேஷன்ஸ் சார்பில் ‘பெரியார் விஷன்’ ஓ.டி.டி. தளம் தொடக்க விழா நேற்று முன்தினம் (21.7.2024) காலை சென்னை பெரியார் திடலில் எம்.ஆர். இராதா மன்றத்தில் நடைபெற்றது. ‘பெரியார் விஷன்’ ஓ.டி.டி. தளம் நேர்காணல் பதிவு அலுவலகத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் திறந்துவைத்தார்.

தி.மு.க. துணை ப்பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, நடிகர் சத்யராஜ், பெரியார் திரைப்பட இயக்குநர் ஞான.ராஜசேகரன் அய். ஏ. எஸ்., மற்றும் ஓவியர் டிராட்ஸ்கி ஆகியோர் மருது திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றத்தில் நடைபெற்ற ‘பெரியார் விஷன்’ ஓ.டி.டி. தளம் தொடக்க விழாவில் லிபர்ட்டி கிரியேஷன்ஸ் இயக்குநர் வீ.அன்புராஜ் அனைவரையும் வரவேற்றார்.

லிபர்ட்டி கிரியேஷன்ஸ் பெரியார் திரைப்படம், புரட்சிக்காரன் திரைப்படத்தை எடுத்து மக்களிடையே பகுத்தறிவுக்கருத்துகளை கொண்டு சேர்த்தது. இங்கே பத்திரிகைத்துறையில் முதலில் இ-பேப்பர் அறிமுகப்படுத்தியது விடுதலை நாளிதழ் தான். கொரோனா காலத்திலும் சூம் கூட்டங்கள் நடத்தியவர் தமிழர் தலைவர் ஆசிரியர். பெரியார் வெப் விஷன் அடுத்த தளம்தான் இந்த பெரியார் விஷன் ஓடிடி. ஸ்டிரீமிங் எளிதாக இருக்கும். யு டியுப் கட்டுப்பாடுகள் கடந்து இருக்கும். தந்தை பெரியார் கருத்துகளுடன் டெலி சீரியல்கள் ஒளிபரப்பாகும். பெரியார் திடலுக்கு கண்டெண்ட் அளிப்பதில் பஞ்சமில்லை. மற்றவர்களுக்கு கண்டெண்ட் கொடுப்பவர்கள் நாம். ஓடிடி உருவாக்கத்தில் பிரின்சு என்னாரெசு பெரியார், வசந்த், மதிசீலன் ஆகியோரின் கடும் முயற்சி பாராட்டத்தக்கது.

நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தூத்துக்குடியில் 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். அவருக்கு இந்த நேரத்தில் வாழ்த்துகள். இனமுரசு சத்யராஜ், இயக்குநர் ஞான. ராஜசேகரன், ஓவியர் டிராட்ஸ்கி மருது உள்ளிட்ட அனைவரையும் வரவேற்கிறோம்.

இவ்வாறு வரவேற்புரையில் வீ.அன்புராஜ் குறிப்பிட்டார்.

### காணொலி திரையிடல்

பெரியார் விஷன் தொடக்க விழாவையொட்டி காணொலி திரையிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தி.மு.க. துணைப்பொது ச்செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் ‘பெரியார் விஷன்’ ஓ.டி.டி. (PERIYAR VISION OTT) தளத்தை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘பெரியார் விஷன்’ ஓ.டி.டி. வாழ்த்துச் செய்தி காட்சிப்பதிவு திரையிடப்பட்டது.

தி.மு.க. துணை ப்பொதுச்செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நடிகர் சத்யராஜ், பெரியார் திரைப்பட இயக்குநர் ஞான. ராஜசேகரன் அய்.ஏ.எஸ்., மற்றும் ஓவியர் டிராட்ஸ்கி மருது ஆகியோருக்கு திராவிடர் கழகத் தலைவர் அவர்கள் பொன்னாடை அணிவித்து இயக்க வெளியீடுகளை வழங்கி சிறப்பு செய்தார்.

‘பெரியார் விஷன்’ ஓடிடி அறிமுக விழாவில், ஓவியர் டிராட்ஸ்கி மருது, இயக்குநர் ஞா ன . ரா ஜ சே க ர ன் அய்.ஏ.எஸ்., பிரச்சாரச்செயலா ளர் வழக்குரைஞர் அ. அருள்மொழி, பொருளாளர் வீ.குமரேசன் ஆகியோர் உரை ஆற்றினார்கள்.

கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் முன்னிலை உரையாற்றினார்.

நடிகர் சத்யராஜ், தி.மு.க. துணைப்பொதுச்செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரையைத் தொடர்ந்து, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விழா நிறைவு சிறப்புரை ஆற்றினார்.

பகுத்தறிவையும், மக்களுக்குப் பயன்படும் அறிவியல் தொழில்நுட்பத்தையும் வெகுவாகப் பயன்படுத்தவும், புதுமைகளை வரவேற்று பரப்பவும் செய்வார் தந்தை பெரியார்.

இக்காலத்தில் சிறியவர் முதல் பெரியோர் வரை பெருமளவில் அனைவராலும் பயன்படுத்தப்படக் கூடிய ஓ.டி.டி. தொழில்நுட்பத்தைத் துணைக் கொண்டு “Periyar Vision” எனும் பெயரில் ‘சமூகநீதிக்கான உலகின் முதல் ஓ.டி.டி’யை லிபர்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் இன்று தொடங்கியுள்ளது.

ஒரு கொள்கைக்காகத் தொடங்கப்படும் உலகின் முதல் ஓ.டி.டி.யாக இதுவே ஆகும். இதில் உரையாடல்கள், உரைவீச்சுகள், நேர்காணல்கள், ஆவணப்படங்கள், குறும்படங்கள், வலைத்தொடர்கள், வகுப்புகள் ஆகியன இடம்பெற இருக்கின்றன. ஒலி, ஒளிப் புத்தகங்கள், இசை ஆக்கங்கள் என பல வடிவங்களிலும் பகுத்தறிவு, சமூகநீதி, பெண்ணுரிமை, ஜாதி ஒழிப்பு, அறிவியல் மனப்பான்மை ஆகியவற்றை முன்னிறுத்திய படைப்புகள் திரையிடப்படுகின்றன.

பெரியார் திரைப்ப டத்தைத் தயாரித்த லிபர்ட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் “Periyar Vision” ஒடிடியை உருவாக்கி வெளியிட்டுள்ளது.

இது ஆண்டிராய்டு தொலைக்காட்சிகளிலும், ஆப்பிள் மற்றும் ஆண்டிராய்டு செல்பேசிகளிலும் கண்டு பயன்பெற முடியும்.

‘பெரியார் விஷன்’ ஒடிடி அறிமுக விழாவையொட்டி, ஆண்டுக்கட்டணம் ரூ.588 உடன் இரண்டு ஆண்டுகள் கட்டணச் சலுகையும், காலாண்டுக் கட்டணம் ரூ.147 உடன் இரண்டு காலாண்டுகள் கட்டணச் சலுகையும், மாதக்கட்டணம் ரூ.49 உடன் இரண்டு மாதங்களுக்கான கட்டணச் சலுகையும் 31.7.2024 வரை அளிக்கப்படுகிறது.

‘பெரியார் விஷன்’ ஓ.டி.டி. தளத்துக்கான ஆண்டுக் கட்டணத்தை மோகனா வீரமணி அவர்கள் ‘பெரியார் விஷன்’ ஓ.டி.டி. பொறுப்பாளர் மதிசீலனிடம் வழங்கினார்.

விழா நிறைவில் ‘பெரியார் விஷன்’ ஓ.டி.டி. சார்பில் மதிசீலன் நன்றி கூறினார்.

### மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் நிகழ்ச்சி!

# தி.மு.க.வின் கொள்கைகளை - திராவிட மாடல் ஆட்சியை மக்களிடம் கொண்டு சேர்ப்போம்!

### வெப்படையில் நடைபெற்ற கொடியேற்று விழாவில் அமைச்சர் – மருத்துவர் மா.மதிவேந்தன் பேச்சு!

நாமக்கல், ஜுலை 23-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் 1980 ஜுலை 20 ஆம் தேதி ஜான்சி ராணி பூங்காவில் தி.மு.க. இளைஞரணி தொடங்கப்பட்ட நாளை நினைவு கூறும் வகையிலும் நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக சார்பில், திருச்செங்கோடு, மல்லசமுத்திரம், காளிப்பட்டி, குமாரபாளையம் ஆகிய பகுதிகளில் கழக இரு வண்ணக் கொடி ஏற்றும் விழா நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையம் தொகுதியில் பள்ளிபாளையம் மத்திய ஒன்றிய திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் வெப்படையில் 45 ஆவது துவக்க விழாவை முன்னிட்டு 60 அடி கொடிக் கம்பத்தில் கழக கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை தாங்கினார். மாவட்ட அவைத் தலைவர் நடனசபாபதி, தலைமை செயற்குழு உறுப்பினர் வெங்கடாசலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளிபாளையம் மத்திய ஒன்றிய செயலாளர் ஆர். செல்வம் வரவேற்புரை ஆற்றினார்.

விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு கழக இரு வண்ண கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில், பேரறிஞர் அண்ணா வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி செய்து வந்தார். அவரது வழியில் தமிழ்நாடு முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிலேயே முதன் மாநிலமாக, முன்னோடி மாநிலமாக திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகிறார். நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் இந்தியாவிலேயே 40க்கு 40 தொகுதிகளை வென்ற ஒரே கட்சி திராவிட முன்னேற்ற கழகம். அந்த அளவுக்கு தமிழ்நாட்டில் ஏழை, எளிய, நடுத்தர மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயலாற்றறி வருகிறார். இளைஞர் அணி தோழர்கள் திராவிட மாடல் ஆட்சியையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் செயல்பாட்டையும் ஒவ்வொரு கிராமங்களிலும் வீடு வீடாக மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்கான பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்களாக இருப்பது பகுத்தறிவு, சுயமரியாதை, சமூக நீதி, சமத்துவம்.

இந்த 4 முக்கியமான தூண்களால் எழுப்பப்பட்ட கோட்டை தான் திராவிட முன்னேற்ற கழகம். இந்த கோட்டையின் தலைவர்கள் தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தமிழ்நாட்டின் அடையாளம் இந்தியாவின் அடையாளம் தமிழர்களின் அடையாளம் உலக தமிழர்களின் பெருமை நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கழகத் தலைவராக பொறுப்பேற்றதிலிருந்து தொடர்ந்து வெற்றிகளை குவித்து கொண்டே வருகிறார். தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை காக்கிற ஒரே இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம். வருங்காலம் இளைஞர்களின் கையில் உள்ளது. இளைஞர்கள் வழிநடத்த வேண்டும். கழக இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழியில் திமுகவின் கொள்கைகளையும், செயல்பாடுகளையும் மக்களிடம் கொண்டு போய் சேர்க்கும் பணியில் இளைஞர் அணியினர் தொடர்ந்து செயல்படுத்திட வேண்டும். கழகத் தலைவர் மு க ஸ்டாலின் அவர்கள் மற்றும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் இளைஞர்களும் இணைந்து இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமையை நிலை நாட்டோம் என்று அமைச்சர் மா.மதிவேந்தன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நாச்சிமுத்து, இளங்கோவன், நகர கழகச் செயலாளர்கள் குமார், விஜய்கண்ணன், ஞானசேகரன், பொதுக்குழு உறுப்பினர் ஒ ஆர் செல்வராஜ், பேரூர் கழகச் செயலாளர்கள் கார்த்திக்ராஜ், ராமமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் முரளி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



வேளாண்துறை சம்பந்தமாக அரசு முறைப் பயணமாக ஆஸ்திரேலியா சென்றுள்ள அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மெல்போர்ன் மாகாணத்துக்குச் சென்றார். வேளாண்மை – உழவர் நலத்துறை அரசு செயலாளர் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் அபூர்வா உடன் இருந்தனர்.

### கோவை மாநகர் மாவட்டத்தில்

# பகுதி வாரியாக கழக உறுப்பினர் உரிமை சீட்டு வழங்குதல்!

### மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!



கோவை, ஜுலை 23-

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, முத்தமிழறிஞர், செம்மொழிக் காவலர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழகத்தின் பவளவிழா ஆண்டை முன்னிட்டு, புதிய கழக உறுப்பினர் படிவத்தை பூர்த்தி செய்து தலைமைக்குக் கொடுத்தவர்களுக்கு,தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட கழக உறுப்பினர் கார்டுகளை கீழ்க்கண்ட தேதிகளில், கோவை மாநகர் மாவட்டத்தில் பகுதி வாரியாக வழங்கப்பட உள்ளது.

23.7.2024 செவ்வாய்க்கிழமை வடவள்ளி பகுதி மாலை 4.30மணி

23.7.2024 பாப்பநாய்க்கன் புதூர் பகுதி மாலை 6.00மணி

23.7.2024 வேலாண்டிபாளையம் பகுதி மாலை 7மணி

24.7.2024 புதன்கிழமை சாய்பாபாகாலனி பகுதி மாலை 4.30மணி

24.7.2024 கணபதி பகுதி மாலை 6.00மணி

24.7.2024 மணியகாரன் பாளையம் பகுதி மாலை 7.00மணி

25.7.2024 வியாழக்கிழமை காந்திபுரம் பகுதி மாலை 4.30மணி

25.7.2024 பெரியகடை வீதி பகுதி 1 மாலை 5.30மணி

25.7.2024 பெரியகடை வீதி பகுதி2 மாலை 6.30மணி

25.7.2024 ராமநாதபுரம் பகுதி மாலை 7.30மணி

26.7.2024 வெள்ளிக்கிழமை சிங்காநல்லூர் பகுதி1 மாலை 4.30மணி

26.7.2024 சிங்காநல்லூர் பகுதி2 மாலை 6.00மணி

26.7.2024 சிங்காநல்லூர் பகுதி3 மாலை 7.00மணி

27.7.2024 சனிக்கிழமை பீளமேடு பகுதி1 மாலை 4.30மணி

27.7.2024 பீளமேடு பகுதி2 மாலை 6மணி

27.7.2024 பீளமேடு பகுதி3 மாலை 7.00மணி

மேற்கண்ட அட்டவணைப்படி கழக உறுப்பினர் கார்டுகள் வழங்கப்படுவதை பகுதி கழக செயலாளர்கள் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் பணம் கட்டி ரசீது வாங்கியவர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கழக உறுப்பினர் கார்டுகள் வழங்கும் ஏற்பாடுகளை அந்தந்த பகுதிக் கழகச் செயலாளர், வட்டக் கழகச் செயலாளர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சேலம் மத்திய மாவட்டம் சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலத்திற்கு உட்பட்ட 6வது கோட்டத்தில். மாவட்டக் கழகச் செயலாளரும் சேலம் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான இரா. இராஜேந்திரன் பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை வாங்கி அவைகளை உடனடியாக நிறைவேற்றி தர கேட்டுக்கொண்டு மனுக்களை அதிகாரிகளிடம் வழங்கினார். உடன் சேலம் மாநகராட்சி மேயர். ஆ.ராமச்சந்திரன் உள்ளார்.



நீலகிரி மாவட்டம், கூடலூர் ஊராட்சி ஒன்றியம், சேரங்கோடு ஊராட்சி, சேரம்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தென்மேற்கு பருவமழை பாதுகாப்பு நலன் கருதி தங்கவைக்கப்பட்டுள்ள குடும்பங்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் நேற்று முன்தினம் (21.07.2024) நேரில் சந்தித்து, அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து, நிவாரணப் பொருட்களையும், சொந்த நிதியிலிருந்து தலா ரூ.5,000/ நிவாரண தொகையினையும் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், முன்னாள் அரசு கொறடா முபாரக் உட்பட பலர் உள்ளனர்.